42



ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# ஸ்ரீராஜகோபாலசுவாமி

# தெப்பத்திருவிழாக்கும்மியும், கருடசேவைக்காட்சி அலங்காரச் சிந்தும், காவடிச்சிந்தும்.

இது

சுந்தரபாண்டியபுரம்

அ. கி. ப. கோபாலகிருஷ்ண அய்யர்

அவர்களாலியற்றப்பெற்று

தென்காசி,

கோமதி விலாஸம் பிரஸில்

ச்சிடப் பெற்றது,

919.

Q22:417
N19
179080



ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# ஸ்ரீராஜகோபாலசுவாமி
# தெப்பத்திருவிழாக்கும்மியும், கருடசேவைக்காட்சி அலங்காரச் சிந்தும், காவடிச்சிந்தும்.

இது
சுந்தரபாண்டியபுரம்

அ. கி. ப. கோபாலகிருஷ்ண அய்யர்
அவர்களாலியற்றப்பெற்று

தென்காசி,
கோமதி விலாஸம் பிரஸில்
அச்சிடப் பெற்றது,

காப்பி 500.

Registered Copy Right
1919

இதன் விலை] [அணா ௨.



ஸ்ரீ

தென்காசி, கன்னிமார் தெரு,

ஆ. சங்கரலிங்கம்பிள்ளையவர்களியற்றிய

# சிறப்புப்பாயிரம்.

செந்திருமா மணிமார்பின் திருமால்வை
குந்தமெனச் சிறந்து மல்குஞ்
சுந்தரபா ண்டியபுரியின் முத்தமிழ்கோ
பாலகிர்ஷ்ணச் சுமுகன் கும்மி
இந்திரமா லாம்பையரும் பூவுலக
மங்கையரு மினிதாய்ச் சேர்ந்து
மந்திரமாய் முப்போதும் நாத்துதிக்க
பாவலரு மகிழ்வர் தாமே. (1)

மாமறை பரசு ராமமா முனியின்
மனோதப பலத்தினி லுதித்த
தாமரை நண்பன் போலகோ பாலத்
தமிழ் வலோன் குயிற்றிய பாடல்
நேமமாய்க் கேட்போர் படிப்பவர் யாரும்
நீணில மதனிலே செல்வப்
பூமனும் வாழ்வுந் திருவருள் பெறுவர்
புண்ணிய புகழ்வளஞ் சிறந்தே. (2)

ஸ்ரீ

சுந்தரபாண்டியபுரம்.

ஸ்ரீராஜகோபாலசுவாமி

# தெப்பத்திருவிழாக் கும்மி.

## நம்மாழ்வார் காப்பு.

நேரிசை வெண்பா.

---

பூபாரந் தீர்க்கவந்த புண்ணியனும் ஸ்ரீராஜ
கோபாலன் மேற்கும்மி கூறுதற்குச்—சார்பாகும்
மாறன் கழலை மறவாத நங்காரி
மாறன் றிருத்தாண் மலர்

## கும்மி

கும்மியடி பெண்காள் கும்மியடி ராஜ
கோபாலனைப் பாடிக் கும்மியடி
செம்மையாய் ருக்மணி சத்திய பாமையை
சேர்த்து கும்மி யடியுங்கடி—முகம்
பார்த்து கும்மி யடியுங்கடி. (க)

செண்பக யானை முகனைத் துதிசெய்து
செப்புவோங் கும்மிக்குக் காப்பாக
பண்பொடு நான்முகன் தேவியின் பாதத்தை
பரவிக் கும்மி யடியுங்கடி—நீங்கள்
நிரவிக் கும்மி யடியுங்கடி. (உ)

கோமளா சாரதா அம்புஜாட்சி தங்கம்
கோகிலா ஜானகி யெல்லோரும்
தாமத மில்லாமல் ராஜகோ பாலனை
சாற்றிக் கும்மி யடியுங்கடி—பதம்
போற்றிக் கும்மி யடியுங்கடி. (ங)

பட்டுடையை யொட்டி யாணத்தி ஞஸ்தன
பாரத்தைக் கச்சையி ஞலிறுக்கி
வட்டமா கநின்று ராஜகோ பாலனை
வணங்கிக் கும்மி யடியுங்கடி—நீங்கள்
இணங்கிக் கும்மி யடியுங்கடி (௪)

பொட்டிட்டு மையிட்டுப் புனுகுஜவ் வாதிட்டு
பூசிய சந்தன கந்தமது
அஷ்டதிக்கு மெட்ட ராஜகோ பாலன்முன்
ஆடிக் கும்மி யடியுங்கடி—ஒன்ருய்க்
கூடிக் கும்மி யடியுங்கடி (ரு)

கல்லிழைத்த வங்கி காப்புக் கொலுசுகள்
காரைமுத்து ரத்ந மாலைகளும்
ஜில்லென் ருெளிவீச ராஜகோ பாலனை
சேவித்துக் கும்மி யடியுங்கடி—கனம்
பாவித்துக் கும்மி யடியுங்கடி (சு)

காதினிற் கம்மல் வயிர மதுவொரு
காததூர மொளி தான்ஜொலிக்க
ஜாதியு டான்சிமைக் கமலமூக் குத்தியுந்
தயங்கக் கும்மி யடியுங்கடி—புவி
மயங்கக் கும்மி யடியுங்கடி (எ)

பச்சைக்கல் மினெளி பளீர் பளீரென
பார்த்தவர் சித்தம் பிரமித்திடவே
கச்சித மாய்க்காலிற் பாதசரந் தண்டை
கலீரெனக் கும்மி யடியுங்கடி—டால்
ஜிலீரெனக் கும்மி யடியுங்கடி. (அ)

கழுத்தில் வயிரப் பதைக்கஞ் சரப்பணி
கண்டசரம் முத்து மாலையிட்டு
பழுதில்லா ரத்தினச் சுட்டிப் பிறைபிட்டு
பாய்ந்துக் கும்மி யடியுங்கடி—மனந்
தோய்ந்து கும்மி யடியுங்கடி (கூ)

கையில் வளைகள் கலகலென அதைக்
கண்டவர் நெஞ்சம் சலசலென
வையக முண்டசெவ் வாயனைக் கொண்டாடி
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி—மலர்
சாத்திக் கும்மி யடியுங்கடி (ய)

சல்லாப் புடவையின் வல்லவாட் டுக்குள்
ஜரிகை புட்டா ரவிக்கை மின்ன
உல்லாச மாகவே நான்கு புறத்திலும்
ஓடிக் கும்மி யடியுங்கடி—கொண்
டாடிக் கும்மி யடியுங்கடி. (யக)

ஜாதி மல்லிகை முல்லை யிருவாட்சி
சம்பங்கி ரோஜா சண்பகமுங்
கோதிலாக் கொண்டையிற் சூடிக்கொண்டு—நீங்
குதித்துக் கும்மி யடியுங்கடி—சம் [கள்
மதித்துக் கும்மி யடியுங்கடி. (யஉ)

செவ்வந்தி தாழம்பூ குடை மல்லிகையும்
சீதளப்பச்சை மருக் கொழுந்தும்
ஒவ்விய பன்னீர் மகிழம்பூ வுஞ்சூடி
உலாவிக் கும்மி யடியுங்கடி—நீங்கள்
குலாவிக் கும்மி யடியுங்கடி. (யங)

கண்டவர் கண்ணும் மனமுஞ் சுழன்றிட
கார்வண்டு கொண்டையிற் றான்சுழல
அண்டரண்டம் போற்றும் ராஜகோ பாலனை
அடர்ந்து கும்மி யடியுங்கடி—நீங்கள்
தொடர்ந்து கும்மி யடியுங்கடி (௧௪)

சுந்தர பாண்டி புரத்தி லமர்ந்திடுஞ்
சுந்தர னும்ராஜ கோபாலன்
விந்தையாய்த் தெப்பத்தில் மேவு முல்லாசத்தை
வியந்து கும்மி யடியுங்கடி—உளம்
நயந்து கும்மி யடியுங்கடி. (௧௫)

ஸ்ரீராஜ கோபாலன் தெப்ப மகிமையை
செப்பத் தாமுண்டோ சேடனுக்கும்
நேராக காணக்கண் ணாயிரம் வேண்டாமோ
நிச்சய மாயங்கு சேருங்கடி—அவர்
உச்சித சேவையைப் பாருங்கடி (௧௬)

நான்கு புறத்திலுஞ் சோலைக ளாமதின்
நடுவின் னீராழி மண்டபமாம்
தேங்கு தண்புன லோங்கிடு நற்குளத்
தெப்பத்தின் காட்சிகண் காட்சியடி—எங்கும்
ஒப்புயர் வில்லாத மாட்சியடி (௧௭)

கொத்து குளோப்புகள் லஸ்தர்வால் ஷேட்டுகள்
கோடி சூரியப்ர காசமதாய்
வைத்தமைத் திட்ட விசித்திர மென்சொல்வேன்
வருவீர்கள் சன்னதி முன்பாக—நலம்
பெருவீர்க ளுன்னதத் தென்பாக (௧அ)

தெப்பத்தின் காட்சியைச் செப்பத் தரமோடி
தேவருங் காண விரும்பிடுவார்
இப்புவி மீதினி லொப்புயர் வில்லாத
இங்கித சிங்காரத் தெப்பமடி—இதற்
கெங்குங் கவிவாண ரொப்பமடி (௧௯)

மல்லரி பேரி தவண்டையெக் காளங்கள்
மத்தளத் தாளம்பொற் சின்னங்கள்
சொல்லரி தாகிய தங்க நாககசுரச்
சுகநய மேன்மையைத் தேருங்கடி—நீங்கள்
இகபர லாபத்தைக் கோருங்கடி (௨௦)

தேவவி மானம்போல் ஜோடித் திருக்கிற
தெப்பத்தில் ராஜகோ பாலனிரு
தேவியாம் ருக்மணி சத்யபா மாவுடன்
சேவை தருவதைப் பாருங்கடி—சித்திரப்
பாவையரே யொன்ருய்ச் சேருங்கடி (௨௧)

தத்திமி தோமென தாசிகள் கூடியே
ஜதிமுறை யாகச் சதிராட
உத்தம வேதியர் வேதகோ ஷத்துடன்
உன்னத மாய்த்தெப்பஞ் சுற்றுதடி—பார்க்க
சன்னத மாய்மன நத்துதடி. (௨௨)

கண்ணபி ரான்திரு சன்னிதி முன்பாக
கற்பூர தீபதூ பங்களொடு
எண்ணிரண் டாமுப சாரமெல்லாஞ் செய்வர்
இன்புடன் சுற்றுக்கொரு முறையாய்—மிக
அன்புட னேகமத் தின்னிறையாய் (௨௩)

வெள்ளிலே காளாஞ்சி யேந்தி நிற்பார்சிலர்
விமானஞ் சுமந்திடு வார்கள்சிலர்
வெள்ளை முத்துக்குடை தான்பிடிப் பார்சிலர்
வீசுவார் சாமரஞ் சிலபேர்கள்—இவை
பூசுரர்க் குள்ளே பலபேர்கள் (உச)

மட்டில்லா பற்பல விசித்திர மாகிய
வாண வேடிக்கைகள் தானடக்க
எட்டுத் திசையிலும் பட்டப் பகற்போல
லயிட்டுக ளெங்கெங்கு மேபூட்டி—பல
சயிட்டாக வைத்தார் நிலைநாட்டி (உரு)

அந்தணர் வீதியி னற்புதக் காட்சியும்
ஆன கடைவீதி தன்னழகும்
சுந்தர மாகிய தெப்பக் குளமதின்
சூட்சியைச் சொல்ல முடியாது—இதை
ஆட்சியாய்க் கொண்டாள் திருமாது (உசு)

கொண்டையில் புஷ்பங்கள் சூடிக்கொள் வார்சிலர்
குங்கும சந்தனம் பூசிக்கொள்வார்
தண்டைச் சிலம்புகள் பூட்டிக்கொள் வார்சிலர்
சந்தோஷ மாக நடைநடப்பார்—சிலர்
சுந்தர மானகவி படிப்பார் (உஎ)

சல்லாப் புடவை தரித்துக்கொள் வார்சிலர்
ஜரிகை ரவிக்கையும் போட்டுக்கொள்வார்
உல்லாச மாகவே பெண்பிள் ளையுடன்
உகந்து சன்னதி முன்பாக—வந்து
மகிழ்ந்து போற்றுவா ரன்பாக (உஅ)

கோடா கோடிஜெனக் கூட்டமடி யந்தக்
கூட்டத்திற் போலீசார் நாட்டமடி.
பாடாப் படுத்திட பாவி திருடரை
பாராக் கொடுக்கிறார் நேராக—அதில்
வீராப்பாய் சுற்றுவார் ஜோராக (உகூ)

சிங்காரத் தெப்பத்தின் மீதிலமர்ந்திடும்
ஸ்ரீராஜ கோபாலன் சேவைகண்டால்
அங்கவர் செய்திடும் பாவம் பறந்தோடி
அல்லற் கடலதைத் தாண்டிடுவார்—மிக
நல்ல பெரும்புகழ் பூண்டிடுவார் (௩0)

திருவை குந்தத்தி லாதிநா ராயணன்
தேவகி யார்தன் திருவயிற்றில்
கருமணி போல அவதாரஞ் செய்திடுங்
கண்ணன் பெருமையைக் கேளுங்கடி—நல்ல
வண்ணமாய்ச் சொல்வேனென் றளுமடி ()

ஆதிமூல மென்ற யானையைக் காத்தருள்
அச்சுத ஞமரு ளாளனடி
வேதியர் முப்போதும் போற்றிசெய் யுஞ்சதுர்
வேதப் பொருளாய் நிறைந்தாண்டி—பஞ்ச
பூதமா யெங்குஞ் சிறந்தாண்டி (௩உ)

பேச்சி தனத்தைச் சுவைத்தாண்டி வாய்ப்
பேச்சு ளவளே மடித்தாண்டி
ஆச்சர்ய மாகவே காளிங்கன் மேல்நின்று
ஆடிய தந்திரக் காரனடி—குழல்
பாடிய ராகவித் தாரனடி (௩௩)

சகட முதைத்தரு ளாயனடி பொதுத்
தையலாற் கட்டுண்ட மெய்யனடி
பகடுக ளேழையு மாய்த்தவண்டி நந்த
பாலனடி லீலா லோலனடி—மறை
மூலனடி வண்ண நீலனடி (௩௪)

கோவர்த்தன மென்னு மலையைத் தூக்கியே
கோக்களைக் காக்கக் குடைபிடித்தான்
கோவிந்த னதியோ ராயிரம் பேர்கொண்டு
கோணக் கூத்தாடிய மாயனடி—அதைக்
காணப் பெருஞ்சம்ப்ர தாயனடி (௩௫)

கம்சனைக் காலா லுதைத்தாண்டி யந்தக்
காமனைப் பிள்ளையாய்ப் பெற்றாண்டி
வஞ்சக் குருந்தை முறித்தாண் டியவன்
வல்லமை யாருக் குண்டாகுமடி—பேர்
சொல்லவே பாவங்கள் போகுமடி (௩௬)

பத்தவ தார மெடுத்தாண்டி நல்ல
பக்தரை ரக்ஷித்துக் காத்தாண்டி
சித்திர ராவணன் பத்துத் தலையையுஞ்
சேதித்த கோதண்டக் கையனடி—கீதை
போதித்த தத்துவ மெய்யனடி (௩௭)

பாரதப் போரை முடித்தாண்டி பஞ்ச
பாண்டவர்க் குத்துணை யானாண்டி
ஓரமில் லாமலே பாஞ்சாலி மானத்தை
ஒருமையாய்க் காத்த விநோதனடி—அவன்
திருமகள் பூமகள் நாதனடி (௩௮)

கூறுவ தென்னடி பதினா றாயிரங்
கோபியர் தங்களைக் கற்பழித்தான்
சேரு மோவ்வொரு கோபியர்க் கொவ்வொரு
சிங்காரக் கிருஷ்ண வுருவெடுத்தான்—கூடி
அங்கவற் கேற்ற சுகங்கொடுத்தான் (௩௯)

தெருத்தெரு வாய்ச்சென்று வீடுகள் தோறும்
திருடியே வெண்ணை தயிர்பாலை
பருகி யுண்டு கொழுத்தாண்டி பொதுப்
பாவையர் மத்தடி பட்டாண்டி—இளம்
பூவையரால் மானங் கெட்டாண்டி (௪0)

உரலை யுருட்டி ஏறிடுவான் வெண்ணை
உரியைத் தட்டி யுடைத்திடுவான்
முரளி கானவேணு ராஜகோ பாலனை
முழங்கிக் கும்மி யடியுங்கடி—நன்றாய்
வழங்கிக் கும்மி யடியுங்கடி (௪௧)

காதலால் கோபியர் தம்மைக்கண் டால்கிருஷ்ண
கண்ணைச் சிமிட்டிக் கைஜாடைசெய்வான் [ன்
ஏதுமில் லாதபொய்ச் சத்தியங் கூறியே
ஏமாத்துந் தந்திரஞ் செய்திடுவான்—அவன்
சாமர்த்திய மந்திரம் ஓதிடுவான் (௪௨)

எமுனையில் கோபிகள் கூடிஜலக் கிரீடை
இன்பமாய்ச் செய்கையிற் கண்ணபிரான்
நிமிஷத்திற் குள்ளவர் சேலையெல்லாம் வாரி
நீண்ட மரந்தன்னி லேறிக் கொண்டான்—மகிழ்
பூண்டவர்தம்மலங் கோலங்கண்டான் (௪௩)

சேலையைக் காணாத யாதவ மாதர்கள்
சிக்கெனத் தண்ணீரி லேமறைந்து
நீலநிற வேணு கானனைக் கும்பிட்டு
நேசமொடு சேலை தாருமென்றார்—விசு
வாசமொடு முகம் பாருமென்றார் (சச)

விரச மில்லாமற் கோபிகளே நீங்கள்
வெட்கத்தை விட்டுக் கரையேறி
சிரசின் மேற்கரங் கூப்பியெ திர்நின்றால்
சீக்கிரஞ் சேலை தருவேனென்றான்—உங்கள்
பாக்கிய போகம் பெருவேனென்றான் (சரு)

வெட்கப்பட் டார்சிலர் துக்கப்பட் டார்சிலர்
வீராப்பு மேபலர் பேசலுற்றார்
பக்குவ மாய்ச்சில ரிப்போத வன்சொன்ன
பாதையிற் சேலையைக் கேட்போமென்றார்—பின்
சோதை மகனைக்கை பார்ப்போமென்றார் ()

சங்கை யெல்லாம் விட்டுக் கூடியே கோபியர்
தாவிக் கரையில் வணங்கிநிற்க
அங்க வரைப்பரி காசமி கச்செய்து
ஆடை கொடுத்தருள் ஸ்ரீமானடி—அவர்
ஜாடையெல் லாங்கண்ட கோமானடி (சஎ)

கும்பலாய்க கூடியே வட்டமாய்க் கோபிகள்
கும்மி படிக்கின்ற வேளையிலே
செம்மையாய்க் கோபாலன் மத்தியிலே வந்து
சேர்ந்து வேய்ங்குழ லூதிடுவான்—சமயந்
தேர்ந்தவர் மீதினில் மோதிடுவான் (சஅ)

இணங்காத கோபியை நாயகன் போல்ச்சென்று
இழுக்கக் கொண்டவ னுமிழுக்க
க்ஷணத்திற் கண்டவரு மிழுக்கக் கண்ணன்
சந்தி சிரித்திடச் செய்தாண்டி—அங்கு
தந்திர ஜாலம் புரிந்தாண்டி (சகூ)

நிறைந்த வெள்ளத் துடைந்த தெனத்தோணி
நேரிழை சேலையெல் லாம்வாங்கி
புரையை யடைத்திளங் கோபிமார் தங்களை
புடவை யில்லாமனிருத் திவைத்தான்—அவர்
இடையினிற் சிங்கார மேவகுத்தான் (ருய)

இத்தகை யாகிய இராஜகோ பாலனை
எப்போதும் நெஞ்சில் மறவாமல்
வைத்து வணங்கினல் சித்தியெல்லாம் பெற்று
வையக மீதினில் வாழ்ந்திடலாம்—நாம்
உய்யவே நல்வழி சார்ந்திடலாம் (ருக)

பாராதி யண்டத்துக் காதார மாகிய
பரபிர்ம வஸ்துவாய்த் தான்விளங்கும்
ஸ்ரீராஜ கோபாலன் றன்னையித் தெப்பத்தில்
தெரிசித் தோர்முக்தி நலம்பெருவார்—திவ்ய
பரிசுத்த ஞானப் பதமுறுவார் (ருஉ)

சங்குசக்கர இராஜ கோபா லற்கும்
சார்ந்திடு மாஜனம் யாவருக்கும்
மங்களம் மங்கள மென்றுசொல்லி நீங்கள்
வாழ்த்திக் குமமி யடியுங்கடி—மலர்
தூத்திக் கும்மி யடியுங்கடி (ருந)

செந்தமிழ் தன்னிலும் வெண்தமி ழாகச்
சிறுமியர் தங்கள் பொருட்டாக
அந்தமாய்ப் பாடிய கோபால கிருஷ்ணன்
அற்புதக் கும்மி தினம்வாழ்க—இதைக்
கற்பவர் மேலுமே லும்வாழ்க (௫௪)

முற்றுப்பெற்றது.

---

ஸ்ரீ

## ஸ்ரீராஜகோபால சுவாமி,
## கருடசேவைக் காட்சி.

# அலங்காரச் சிந்து.

டில்லி நகரத்திலே டிசம்பர் பனிரண்டிலே
என்ற வர்ணமெட்டு.

இப்புவியோர் கொண்டாடும் இராஜகோ பாலனது
தெப்பத் திருவிழாவி னற்புதம குத்துவத்தை
செப்புங்கோ பாலகிருஷ்ணன் வாக்கியமே
ஒப்புயர்வில் லாதசி லாக்கியமே. (இப்) 1

திருவிழா தன்னை தினஞ் சேவிக்குஞ் சேடியரே
கருடவா கனக்காட்சி கண்டவர்கள் காசினியில்
கட்டாய மிஷ்டசித்தி தான்பெறுவார்
எட்டாத முக்திநிலை யின்புறுவார். (இப்) 2

சுத்திப்பதி னாறுயிரந் தோகையரைச் சேர்ந்ததன்றி
நித்திய பிர்மச் சாரியென்று சத்தியங்கள் செய்தவண்டி
நேர்ந்தபல தந்திரசு தந்திரனும்
சேர்ந்தவுய ரஷ்டாக்ஷர மந்திரனும். (இப்) 3

பூரத மத்தியிலே பொருந்துங் கருடனிலே
நீரமுட னேறிவரும் ஸ்ரீராஜ கோபாலன்
திருவடியைக் காணயிது தருணமடி
அருள்வடிவைக் கண்டுசெய்வீர் சரணமடி (இப்) 4

பற்பல பழக்குலையும் பக்கமெல்லாந் தோரணமும்
அற்புதவி தானங்களு மண்டம ளாவுரதம்
அசைந்துவரும் காட்சியென்ன சிங்காரம்
இசைந்ததுபோ லெங்குமில்லை யலங்காரம் (இப்) 5

பூரண கும்பங்களுந்தோரண மாலைகளும்
காரணச் செல்வர்களின் வாரணப் பரிமாவும்
காசினியி லிதுபெரிய வைபவமே
தாசர்களுக் கிதுபுண்ணிய சம்பவமே. (இப்) 6

தோப்புத் துரவுகளுஞ் சூழுநதி தீரங்களும்
காப்பான கோவில்களுங் கண்டகண்ட விடமெல்லாம்
கனத்தஜன கூட்டமது காணுங்கடி
மனத்திலிச் சம்பவத்தைப் பேணுங்கடி. (இப்) 7

அண்டாத கும்பலடி ஆனந்தச் சேவையடி
பண்டாதி தேவர்களும் பார்த்துமலர் மாரிபெய்ய
பாவலரும் நாவலருங் கவிபாட
பூவலருங் கோவலருந் தாங்கூட. (இப்) 8

எங்கெங்குந் தீவட்டிக ளெங்குமத்தாப்புபாணம்
எங்கெங்குஞ் சூரியன்போல் இலங்கி ஜொலிக்குதடி
கங்குல்பகல்த் தெரியாமல் மாறுதடி
தங்கமேயி தென்னவொளி மீறுதடி. (இப்) 9

அதிர்வெடிகள் தான்முழங்க வலைகடல்போல்வாத்தியங்
விதவிதமாய்த் தானொலிக்க மெல்லியர்கள்சதிராட [கள்
வேதகோஷம்புரிவார் மாமறையோர்
கீதத்துதிபுரிவா ரித்தரையோர் (இப்) 10

மாஜனக்கூட்டமடி மாருதகோஷ்டமடி
தாசர் கொண்டாட்டமடி சத்ஜனற்சிரேஷ்டமடி
தானவரும் வானவருமே புகழ்வார்
மானவருங் கானவருமே மகிழ்வார் (இப்) 11

தேஜோன்மய மாய்விளங்கும் ஸ்ரீராஜகோபாலன்
பாசமுள்ள கருடசேவைப் பார்த்தாற் பவந்துலையும்
பண்ணவரெல் லாம்புகழு மாயனடி
கண்ணனிவ னடியார்க்கு நேயனடி (இப்) 12

ஆடிவிட்ட யென்பந்தை யாரடிதிருடினது
தாடிவுந்தன் ரவிக்கையிலே தாளொளித்தாய் கள்ளியெ [ன்று
தையலரை யேமாற்றுஞ் சமர்த்தனடி
வையகத்தில் மாமாயைச் சித்தனடி (இப்) 13

நவநீத சோரனடி நல்லவர்க் குதாரனடி
பவனிவருங் கருடசேவைப் பாவனச்சிங்காரனடி
பஞ்சவர்க்குத் தூதுசென்ற சிங்கமடி
கொஞ்சாத கோபியர்க்குப் பங்கமடி (இப்) 14

கோபாலனூதுகின்ற குழலோசை கேட்டவுடன்
கோபியர்களெல்லோருங் கூடிப்பு றப்படுவார்
கொஞ்சிச ரசம்புரிவார் சிலபேர்கள்
அஞ்சிக்குறைக் கூறிடுவார் பலபேர்கள் (இப்) 15

இணங்காத கோபியரை எதிராகக் கண்டவுடன்
மணக்கமழுங் கூந்தலிலே மாட்டல்சிக்கிக் கொண்ட [தென
வந்துகொண்டையைப்பிடித்துத் தான்வளைப்பான்
தந்திரமாய்யிதழ் சுவைத்து மனங்களிப்பான் (இப்)

மல்லிகை முல்லைரோஜா மருக்கொழுந்து ஜாதிமலர்
நல்லநல்ல மாலையிட்டு நடுவிற்கம்பி சோமனிட்ட
நற்கருடவாகனத்தில் நாரணனை
அற்புதமாய் போற்றிசெய்வீர் பூரணனை (இப்) 17

தெப்பவிழாக்கொண்டருளி ஸ்ரீராஜ கோபாலன்
செப்புமுயராலயத்துள் சேர்ந்தவுடன்சேயிழையார்
சிங்காரலாலி கள் பாடத்தொடுத்தார்
தங்கத்தட்டாலத்திதா னெடுத்தார் (இப்) 18

கண்ணனுக்கும்மங்களமே கண்டவர்க்கும்மங்களமே
விண்ணவர்க்கும் மங்களமே வேந்தர்கட்கும்மங்களமே
வேண்டியிதைப்படிப்போர்க்கும் மங்களமே
தூண்டியிதைக் கேட்போர்க்கும் மங்களமே (இப்)

கூடுமிசைக் கவிபாடுங் கோபால கிருஷ்ணனுக்கும்
நீடுபுவி யாடவர்க்கும் நேரிழையார் தங்களுக்கும்
நிகழ்த்துமறை வேதியற்கும் மங்களமே
ஜகத்திற்கலை வாணருக்கும் மங்களமே (இப்) 20

---

ஸ்ரீ

## காவடிச்சிந்து.

பாளைவாய்க் கமுகில் என்றமெட்டு

### கலவி மகிழ்ச்சிகூறல்.

இராஜகோ பாலனென்னை
நேசித்த ணைந்தசுகம்
என்னசொல்வே னெந்தனுயிர்ப் பாங்கியே-சொன்னால்
சன்னதமுண் டாகுமாசை யோங்கியே,
பேசுகின்ற பேச்சில்ப்பெரும்
ஆசைவிளைந் தேமனது
பிரமிக்கச்செய் தாண்டியென்ன மாயமே—உன்
மர்மமெல்லாங் கண்டவனு பாயமே (இ)

அஸ்தமதைத் தான்பிடித்து
முத்தமிட்டு மடியில்வைத்தே
அற்புதஞ்செய் தூட்டிவிட்டான் மோகமே—நான்
சொப்பனத்துங் கண்டிலேனிப் பாகமே
விஸ்தாரமாய்ப் பட்சிகளின்
சத்தமிட் டிதழ்சுவைத்து
விரகதா பத்தைமிக மூட்டினான்—கைச்
சரசவித் தைத்திறமை யெல்லாங்காட்டினான் (இ)

ஆவலாய்ஸ்த னஞ்சுவைத்து
மேவுகரி கரம்புரிந்து
அமுதநலத் தையுடைத்தான் யூகியே—நல்ல
குமுதவிதழ்ப் பெண்களனு போகியே
சேவலது கூவுமட்டும்
தேவகிகு மாரனென்னை
சித்தமெல்லாந் தானுருக வாட்டினான்—அவன்
மெத்தமெத்த லீலையெல்லாம் பூட்டினான் (இ)

செந்தமிழ்கோ பாலகிருஷ்ணன்
விந்தையுள்ள கவிபாடி
சேடிகளே கூட்டிவந்தால் புண்ணியம்—சகி
நாடியுமக் கின்னுமுண்டாங் கண்ணியம்
எந்தனந் தரங்கம்போல
சந்தோஷமாய்க் கூட்டிவைத்தாய்
பைந்தொடியே யுந்தனுக்கு மங்களம்—இதைச்
சந்ததம் படிப்பவர்க்கு மங்களம். (இ)

வெள்ளிமலை யோத்தபல மேடை
என்ற வர்ண மெட்டு

## தலைவி வருந்தல்

---

சுந்தர பாண்டியபுர வாசன் தன்னை
தோத்திரஞ் செய் தாசருக்கு நேசன் மலர்ச்
சோலையிலே கண்டதொரு
காலையிலே சொன்ன சொல்லைத்
துறந்தான் முற்றும் மறந்தான்
பந்துஸ்தன மீதுபடர் தேமல் கண்ட
பாருலகி லேபெரிய ஓமல் வாசப்
பன்னீரெல்லா மேயெனக்கு
வெந்நீரைப்போற் றாங்கொதிக்க
பார்த்தாய் உடல் வேர்த்தாய். (சு)

புங்கவர்கள் போற்றுனந்த பாலன் மகா
புண்ணியனும் இராஜகோ பாலன்
போனவிடம் நானறியேன்
கானமயி லாளே தூது
போடி கூட்டி வாடி
கொங்கை ரண்டும் மலைபோல விம்மி வலி
கொள்ளுதடி யெந்தன்குரல் கம்மி
கொஞ்சியனை நிட்டகண்ணன்
வஞ்ச நினைந் திட்டதென்ன
கோதாய் போவாய் தூதாய். (சு)

கண்டயிட மெல்லாமவன் ரூபம் இங்கு
காணுதடி யென்னபரி தாபம

கைக்குதடி பாலு மன்னம்
தைக்குடி மாரனம்பு
காராய் முகம் பாராய்
கொண்டையிட்ட கூந்தல்முடி கலைந்து இந்தக்
கூடமெல்லாம் புரளுதே யலைந்து
கோலவளை யுங்கழன்று
சாலவிழி யுஞ்சுழன்று
குழைக்குந் தாபந் தழைக்கும். (சு)

தென்றற்புலி போலவந்து சீறி எந்தன்
சித்தமெல்லாங் கொள்ளை கொள்ளும் வாறி
திங்களுங்க னல் மயமாய்
அங்கமெல்லாம் வீசுகிறான்
தேனே சகி யேனே
அன்றிலொரு பக்கம்வந்து கூவி எந்தன்
ஆவிதனை வாட்டுதடி மேவி
ஆரவார மிட்டு கடல்
மீறியொ லிப்பதினல்
அஞ்சும் மையல் மிஞ்சும். (சு)

பூபாரந் தீர்த்தவனைத் தேடி மிகப்
புலம்புதடி யெந்தன்மனம் வாடி
புத்திதடு மாறுதடி
வஸ்திரமுஞ் சோருதடி
புரண்டு மதி மருண்டு
கோபால கிருஷ்ணன்கவி பாடி சகி
கூட்டி வருவாய்விரைந் தோடி
கொஞ்சமல்ல வவன் செய்த
வஞ்சகமெல் லாமெடுத்துக்
கூறா யொரு வாராய். (சு.)

## சந்தவரை வந்த குகநாதா
என்ற வர்ண மெட்டு.

தேன்மொழியே தெப்பமதை நாடி நாம்
தெரிசிக்க மஞ்சனநீ ராடி அதி
சீக்கிரமாய் நீயெழுந்து வாடி
உற வாடி
மலர் சூடி சகி
செல்லுவோ மொருமனதாய்க் கூடி. (தே)

மான்விழியே என்மனைவிற் போராய் உன்
மனதி னினைத்ததென்ன கூறாய் நீ
வந்தேயென் னேடுவழி சேராய்
முகம் பாராய்
முத்தந் தாராய் அடி
மங்கையேநீ சிங்காரிப்பாய் ஜோராய். (தே)

தங்கநகை யங்கமெல்லாம் பூட்டு ரத்னச
சரடு பதக்கந்தோடு மாட்டு உன்
ஜாலவிழியில் மையைத் தீட்டு
நடை காட்டு
நல்ல ரோட்டு நான்
சாற்றுவேன்கோ பாலகிருஷ்ணன் பாட்டு. (தே)

பங்கமில்லாத் துங்கமிட்டாய் லட்டு இன்னும்
பலகார மெல்லாம்வாங்கிக் கட்டு அடி
பஞ்சவர்ண மானதொரு பொட்டு
நுதலிட்டு
சுகப் பட்டு வழிப்
பாதைச்சில வுக்கெடுப்பாய் துட்டு. (தே)

சோலைசெறி சாலைதன்னை நோக்கு அடி
சுந்தரியே யிதுநல்ல தாக்கு எடு
துளிரான வெற்றிலைநறப் பாக்கு
பையைத் தூக்கு
நல்ல வாக்கு நீ
சொல்லடியிதுவுமொரு ஜோக்கு. (தே)

வேலையொத்த நீலவிழி மாதே நான்
வேணதெல்லாந் தருவேனிப் போதே மண
மேன்மை யுடையமலர்க் கோதே
என்மேற் சூதே
நினை யாதே என்னை
மேவி நடப்பாய்தங் காதே. (தே)

தொல்லுலக மெல்லாம்புகழ் நாடு அது
சுந்தரபாண் டியபுரங் கூடு சொர்ண
ஸ்தூபிகோ புரத்தைக்கொண் டாடு
அன் போடு
வழி பாடு செய்து
தோத்தரிக்க மாதவனைத் தேடு. (தே)

நல்லவர்கள் புல்லுமணி மேடை இது
நாகரீகத் தெப்பக்குள வோடை அதில்
நாடிவினை யாடுமன்னப் பேடை
சின்னக் காடை
செய்யுஞ் சாடை பதி
தாலுகாதம் வீசுமலர் வாடை. (தே)

தெப்பமதி லப்பன்வருங் காட்சி இந்த
சேவைபது முத்திதருஞ் சூட்சி மற்ற
தேவருக்கு முண்டோயிந்த மாட்சி

யான நீட்சி
திரு வாட்சி இது
தேர்ந்தவர்க்கு வேண்டுமோ அத் தாட்சி. (தே)

முப்புவியி லொப்புவமை யேது இந்த
மூர்த்தியி னருளோதப் பாது இங்கு
முத்துநகை யாளேநீயுமோது
மகா சாது
சங்க மீது நாம்
முழுபக்தி செய்யவிது தோது. (தே)

எட்டுதிசை முட்டுஞ்சனக் கூட்டம் இதை
என்னசொல்வே னன்னய ச்ரேஷ்டம் பார்
எவ்விடத்தும் போலீசார்கண் ணோட்டம்
பூந் தோட்டம்
நதி நீட்டம் இதில்
யாவருக்கு மிங்கிதக்கொண் டாட்டம். (தே)

பட்டிடையிற் கட்டியசிங் சாரி நாம்
பாசமுட னேமனதிற் கோரி வந்த
படிமுடிந் ததுநிறை வேரி
இளைப் பாரி
அலங் காரி கூடி
பட்சமுடன் வைக்கலாஞ்ச வாரி. (தே)

---

மஞ்சுநிகர் குந்தளமின்னே என்ற வர்ண மெட்டு.

## தென்காசி லோகநாயகி அப்பாள் துதி.

---

ஆதரிப்பாய் லோகநாயகி
தென்காசி தன்னில் அன்பாயமர்ந்த
அசுர குல காலநாயகி மிக

ஆசையாய்விசு வேசர்பாகத்து
பாசமாயுறை யீஸ்வரியுனை
அண்டினேன் சிவகாமிசுந்தரி
அடியேன்மீதில் அருள்புரிவாய்
அண்டமெலாம் நிரந்தரி. (ஆத)

மாதவர் துதிக்கு மென்தாயே
திரிபுரசுந் தரவரதி
மகிடாசூர மர்தனிநீயே அருள்
மன்னுமரனிடம் மின்னுமன்னமே
அன்னையென்றுனை நன்னயத்துடன்
வந்தடைந்தேன் லோககாரணி
வரமருள்வாய் தருணமிது
மனதுவைப்பா யண்டபூரணி. (ஆத)

நாடுஞ்சதுர் வேதராணியே
சங்கரிசக்தி சாம்பவியுமை
நாரிகௌரி கிருஷ்ணவேணியே புகழ்
நண்ணுமங்கையற் கண்ணியேவுயர்
விண்ணுளார்களுந் திண்ணமாகவே
நம்பித்துதிசெய்யுஞ் சூலியே
இமையவல்லி சமயமிது
நாயேனையாளுவாய்க் கபாலியே. (ஆத)

கூடுங்கவிபாட இலாக்கியம்
குவலயத்தில் பலனளிக்கும்
கோபாலகிருஷ்ணன் வாக்கியம் இதை
கூறும்யாவரும் பாரில்நற்கதி
சேருவாரெனில் வேறுவேண்டுமோ
குன்றவில்லிக்கேற்ற மாதேவி
கோமளப்பத தாமரைதன்னை
கொஞ்சமும் மறவாதென்னுவி. (ஆத)

---

